செய்தி வெளியீடு எண்–780 நாள்– 21.9.2008

# தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், சென்னை – 35.

## பத்திரிகை குறிப்பு

தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் 27.06.1991 ஆம் தேதி அன்று நிறுவப்பட்டது. இந்நிறுவனம் பாரத ரிசர்வ் வங்கியில் வங்கிசாரா நிதி நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு உள்ளது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமானது அடிப்படை கட்டமைப்பு வசதிகள் குறிப்பாக தமிழ்நாடு மின் திட்டங்களுக்கு, மின் உற்பத்தி, மின் பங்கீடு மற்றும் மின் வினியோகத் திட்டங்களுக்கு தேவையான நிதியைத் திரட்டுவதாகும். இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.50 கோடியாகும். இதில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.22 கோடி.

## வைப்பீட்டுத் தொகைகள்

இந்நிறுவனம், வைப்பீட்டாளர்களுக்கு பரிவோடு சிறந்த சேவை புரிந்தும், தொடர்ந்து இலாபம் ஈட்டியும் வைப்பீட்டுத் தொகையை அதிகரித்ததோடு மட்டுமின்றி வைப்பீட்டாளர்களின் மனதில் நிலையான இடத்தைப் பெற்றுள்ளது. மேலும் வைப்பீடுகளுக்கு அதிக வட்டி வழங்குவதாகக் கூறி சில தனியார் நிதி நிறுவனங்கள் செய்த நிதி மோசடிகள் காரணமாக பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தமிழ்நாடு

மின்விசை நிதி நிறுவனத்தின் மீது அசையாத நம்பிக்கை கொண்டுள்ளனர். இதுமட்டுமன்றி, இந்நிறுவனம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அளிக்கும் வட்டியை விட ஒரு சதவிகிதம் அதிகம் வழங்குவதன் பயனாக **1991–1992** ஆம் ஆண்டில் ரூ.**2.09** கோடியாக இருந்த வைப்பீட்டுத் தொகை 19/09/2008 அன்று **ரூ.2937.15 கோடியாக** வளர்ந்துள்ளது. அதே போன்று, **1991–1992** ஆம் ஆண்டில் **816** ஆக இருந்த வைப்பீட்டாளர்களின் எண்ணிக்கை 19/09/2008 அன்று **3,05,998** ஆக வளர்ந்துள்ளது.

மேலும் தமிழ்நாடு மின்விசை நிதி நிறுவனம் **22/09/2008**–லிருந்து வைப்பீடுகளுக்கு அளித்து வரும் வட்டிவிகிதம் பின்வருமாறு:

| காலம் (Period) | வட்டி விகிதம் (%) ஓராண்டுக்கு (Per Annum) |
|---|---|
| 12 மாதங்கள் | 10.50 |
| 24 மாதங்கள் | 10.75 |
| 36,48 & 60 மாதங்கள் | 11.00 |

இதுமட்டுமன்றி, இந்நிறுவனம் **58 வயது நிரம்பிய மூத்த குடிமக்களிடமிருந்து (Senior Citizens)** பெறப்படும் 12 மற்றும் 24 மாதங்களுக்கான வைப்பீடுகளுக்கு கூடுதலாக 0.25% சதவிகிதமும், 36, 48 மற்றும் 60 மாதங்களுக்கான வைப்பீடுகளுக்கு 0.50% சதவிகிதமும் வழங்கி வருகிறது.

## கடனுதவி

இந்நிறுவனத்தால் திரட்டப்படுகின்ற நிதி பெரும்பகுதி தமிழ்நாடு மின் வாரியத்தின் மின் உற்பத்தி / மின் பங்கீடு மற்றும் மின் விநியோகத் திட்டங்களுக்குக் கடனாக அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் தொடங்கிய நாள் முதல் ரூ.8772.57 கோடிகளை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கடனாக அளித்துள்ளது. இதில் 19/09/2008 அன்று நிலுவையில் உள்ள நிகர கடன் தொகை ரூ.3534.61 கோடியாகும். மேலும், இந்நிறுவனம் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றிற்கும் ரூ. 105.00 கோடி கடனுதவி அளித்துள்ளது.

## அரசுத் திட்டங்கள் செயலாக்கம்

சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் இதுவரை **ரூ.353.59** கோடிகளை (19/09/2008 வரை) வைப்பீட்டுத் தொகையாக **2,32,174** குழந்தைகளுக்காகப் பெற்றுள்ளது.

திருக்கோயில்களின் ஒருகால பூஜை திட்டத்தின் கீழ் 19/09/2008 அன்றுவரை **ரூ.25.51** கோடிகளை **10202** திருக்கோயில்களிடமிருந்து இந்நிறுவனம் வைப்பீட்டுத் தொகையாகப் பெற்றுள்ளது.

பள்ளி மாணவ மாணவியரின் வருவாய் ஈட்டும் தாய் அல்லது தந்தை விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ அவர்களது கல்வி மற்றும் பராமரிப்புக்காக, நிதி வழங்கும் திட்டத்தின் கீழ் **ரூ.3.75** கோடிகளை 19/09/2008 அன்று வரை வைப்பீட்டு நிதியாக பெற்றுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட **150** ஆதரவற்ற குழந்தைகள், பெண்கள் மற்றும் திருமணம் ஆகாத வளரிளம் பெண்களின் பெயரில் வைப்பீடு செய்ய அரசிடமிருந்து **ரூ. 6.76 கோடிகளை** 19/09/2008 அன்று வரை வைப்பீடு நிதியாக பெற்றுள்ளது.

இந்நிறுவனம் துவக்கத்தில் இருந்து தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. செலுத்தப்பட்ட மூலதனத்தில் 20 விழுக்காடு ஈவுத்தொகையாக பன்னிரண்டு ஆண்டுகளாக கடந்த **1995–1996** ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து அரசிற்கு வழங்கி வருகிறது. 2006–07 நிதியாண்டு வரை **இந்நிறுவனம் ஈவுத் தொகையாக மொத்தம் ரூ.47.62 கோடிகளை தமிழ்நாடு அரசுக்கு வழங்கியுள்ளது.**

**************

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.